REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் 4-ந் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 23௳ வெள்ளி (5—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 24௳ சனி (6—4—57) [இதழ் 255

காயப்படுத்தும் துப்பாக்கியால் சுடுவதா ?- கொல்லும் துப்பாக்கியால் சுடுவதா ?

பலாத்காரத்தில் ஈடுபடும் கும்பலைக் கலைக்கும் வகை யாது ?

இங்கிலாந்து முறையைப் பின்பற்றுவதா? இத்தாலிய நடைமுறையை மேற்கொள்வதா ?

அகிம்சாவாதிகள் நடத்திய ஆராய்ச்சி !

புதுடில்லி, ஏப். 4—

மத்திய—மாகாண ஆட்சியின் சார்பில், காந்திய சீடர்களான—முறையே உள்நாட்டு அமைச்சரும், முதல் அமைச்சர்களும், தனிநபர் சொந்துக்களுக்கும் பொது சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தும், பலாத்காரச் செயல்களிலும் ஈடுபட முனையும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு, எத்தகைய ஆயுதத்தை மேற்கொள்ளுவது என்பதுபற்றிய ஆராய்ச்சியில் இவ்வாண்டுத் துவக்கத்தில் ஈடுபடலாயினர்.

கூட்டத்தினரைத் துப்பாக்கியால் சுட்டுக் கலைப்பதற்குப் பதிலாக, வேறு கொடுமையில் குறைவான முறையினைக் கைக்கொள்ள, விரிவான ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபடலாயினர், மேற்குறிப்பிட்ட அகிம்சாவாதிகளான காங்கிரசு அமைச்சர்கள்! திருப்திகரமான எந்த முடிவிற்கும் அவர்கள் இன்னும் வரவில்லை எனத் தெரிகிறது.

துன்புறுத்தும் துப்பாக்கி

'துப்பாக்கியால் சுட்டு மக்களைச் சாகடிப்பது கூடாது' என்ற கருத்தை, முதலமைச்சர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

கூட்டங்களைக் கலைக்க முதல் முதலாகத் துன்புறுத்தும் துப்பாக்கிகளை உபயோகித்து அதனால், எதிர்பார்க்கின்ற பலன் கிட்டவில்லையானால், அதனினும் உயிரைக் குடிக்கக்கூடிய கொடியவன்மையான துப்பாக்கிகளைப் பிறகு பயன் படுத்தலாம் என்ற முடிவிற்கு அவர்கள் வந்திருப்பதாகவும் நம்பப்படுகிறது. இதைப் பரிட்சார்த்தமாக கையாண்டு பார்ப்பது என்றும் அவர்கள் முடிவு கட்டியுள்ளார்களாம்.

இங்கிலாந்தில்!

மற்ற நாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளும் மக்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்த முடியாத பலாத்காரச் செயல்களை மேற்கொண்டு சொத்துக்களுக்குச் சேதத்தை விளைவிப்பது கிடையாதாம். இங்கிலாந்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு, பொதுவாக கூட்டத்தினர் மீது பெருத்த குழாய்கள்மூலம் தண்ணீரை இரைப்பது வழக்கம் என்றும், அங்கு நாடு முழுமையிலும் பாதாளத் தண்ணீர்க்குழாய் அமைக்கப்பட்டு இருப்பதுபோல் இந்த நாட்டில் இல்லாததால், அம்முறையை இங்கு பின்பற்றுவது சாத்தியமில்லை என்றும் அம்முறை கைவிடப்பட்டு விட்டது.

இத்தாலி

உலகப் பெரும் போருக்கு முன்பு இத்தாலியில் கட்டுக்கடங்காத பலாத்காரச் செயல்கள் பரவலாக நடைபெற்று வந்தன என்றும், அவ்வாறு கூடியுள்ள கும்பலைக் கலைப்பதற்கு சீல்டா என்பவர், ஜீப்கார் போலீஸ் படையை ஜீப்கார்களுடன் கூட்டத்திற்குள் செலுத்தி கூட்டத்தைக் கலைப்பதில் வெற்றி பெற்றுள்ளார் என்றும், அதே 'ஜீப்கார்' முறையை இந்த நாட்டிலும் மேற்கொள்ளலாம் என்றும் அமைச்சர்கள் கலந்து பேசினராம்.

தோல்குண்டு

மக்களைக் கொல்லாது வலியை மட்டுமே தரும் தோல்குண்டுகளை சுடும் முறையானது வங்காளத்தில் தோல்விகண்டு விட்டிருப்பதால், அம்முறை, கூட்டத்தைக் கலைப்பதற்குப் பயன் அளிக்காது என்றும் அமைச்சர்கள் தீர்மானித்தனர்.

மக்கள் சபை கலைக்கப்பட்டது

புதிய சபை செயலாற்ற துவக்க நடவடிக்கைகள்

புதுடில்லி, ஏப். 4—

இந்திய பாராளுமன்ற (மக்கள்) சபையை இன்று தலைவர் இராசேந்திரபிரசாத் கலைத்துவிட உத்தரவு பிறப்பித்துவிட்டார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய புதிய மக்கள் சபை மே மாதம் 11-ந் தேதி கூட்டப்படும் என்று தெரிகிறது. பதவிக்கான கோட்பாடுகளை அன்று உறுப்பினர் பூர்த்தி செய்வர். 12, 13-ந் தேதிகள் விடுமுறை நாட்களாகும். 14-ந் தேதி சபைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். 15-ந் தேதி மக்கள் சபையில் இந்திய மக்கள் தலைவர் உரையாற்றுவார்.

இதற்கிடையில், இந்தியத் தலைவர், துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஜனாதிபதி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி!

கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை இன்று பதவியேற்று விட்டது

திருவனந்தபுரம், ஏப். 5—

கேரள மாநிலத்தில் கடந்த 375 நாட்களாக நடைபெற்ற வந்த ஜனாபதி ஆட்சி நேற்றுடன் முடிவடைந்துவிட்டது.

ஜனநாயக ரீதியில் மந்திரி சபை அமைக்கப்படுவதால் ஆலோசகர் பதவி ரத்தாகிவிட்டது.

கேரளத்தில் இன்று பிற்பகல் 12-30 மணியளவில் நம்பூத்திரிபாட் தலைமையில் புதிய அமைச்சரவை பதவி ஏற்றது.

அரசாங்க மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த தனிப் பந்தலில் பதவி ஏற்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு சட்டசபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

★

அஞ்சியவர்களுக்கும், தோற்றவர்களுக்கும் கவர்னர் பதவிகள் தரப்படுமா ?

புதுடில்லி, ஏப். 4—

அடுத்த இரண்டு திங்களில் 5 புதிய கவர்னர்களை நியமனம் செய்யவேண்டிய நிலை ஏற்படக்கூடுமாம் !

பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த கவர்னர்களின் பதவிக் காலம் தற்போது முடிவடைகிறது.

இந்தப் பதவிகள், அமிர்தகௌரி, காட்கில், சந்தானம், வி. வி. கிரி, படாஸ்கர், சுக்தாஸ்கர் போன்றவர்களுக்குத் தரப்படக்கூடுமெனகருதப்படுகிறதாம்.

இந்தப் பட்டியலில், தேர்தலில் போட்டியிட அஞ்சியவர்களின் பெயர்களும், மக்கள் ஆதரவு இல்லாது தோற்றுப் போனவர்களின் பெயர்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கேரளத்தில் முதல் சீர்திருத்தம்

திருவனந்தபுரம், ஏப். 4—

சென்னை மாநிலத்தில் அமைச்சர்களுக்கு ஊதியமாக ரூ. 1,500 தரப்படுகிறது.

கேரளத்தில் பி. சோ. அமைச்சரவை ஆட்சியிலிருந்தபோது அமைச்சர்கள் மாதம் ரூ. 500 மட்டுமே ஊதியம் பெற்றுவந்தனர்.

இப்போது பதவி ஏற்றுள்ள கம்யூனிஸ்டு அமைச்சரவை மாதம் ரூ. 350 மட்டுமே அமைச்சர்களின் ஊதியமாக நிர்ணயிக்கக் கூடுமெனத் தெரியவருகிறது.

அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டால் இந்தியாவிலேயே கேரளத்தில் தான் அமைச்சரவை ஊதியம் மிக குறைவாக இருக்கும்.

கம்யூனிஸ்டுகட்சியினரின் வெறியாட்டம்

கழகத் தோழர்கள் வெட்டப்பட்டனர்; படுகாயப்படுத்தப்பட்டனர்

(டிரங்க் டெலிபோன்)

மதுரை, ஏப். 5—

தேர்தலுக்கு முன்பும்—பின்பும் மதுரையில் பல காலித்தனங்கள் உச்சநிலையை எய்தியிருக்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்தக் காலித்தனத்தைத் துவங்கியுள்ளனர். தங்களின் வெறிகொண்ட செயல்களின் மூலம், தி. மு. கழகத் தோழர்கள் பலரைத் தாக்குவதில் கண்ணும் கருத்தும் செலுத்தியுள்ளனர்.

கழக முன்னணி வீரர்களின் உருவப்படங்களும் அவர்களின் வெறித் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றன.

தாக்கப்பட்ட தோழர்கள் பலர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்தே வெறிச்செயல் எந்த அளவிற்குச் சென்றிருக்கிறது என்பதை எவரும் உணர்ந்துகொள்ள முடியும்.

கம்யூனிஸ்டுகளின் வெறித்தனத்திற்கு இலக்கானவர்களின் விவரம் வருமாறு :—

தேர்தலுக்கு முன் நடராசன் என்ற தோழர் தாக்கப்பட்டார்!

லால்குடி-நடராசன் படிப்பகத்தில் நுழைந்து காலித்தனம் செய்தனர்!

கழகத் தோழர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி வெற்றி விழா கொண்டாடியபோது, சிம்மக்கல் பகுதியில் கருணாநிதி, சம்பத் ஆகியவர்களின் உருவப் படங்களை உடைத்தனர் !

ஏப்ரல் முதல் நாள் இன்னிசை நிகழ்ச்சிக்குச் சென்று திரும்பிய அழகன், மூக்கன் என்ற தோழர்களை அரிவாளால் வெட்டி காயப்படுத்தினர் !

தேவி டாக்கீஸ் ரோடில், மீனாட்சிசுந்தரம், சு. கு. மூர்த்தி என்ற தோழர்களை ஆயுதங்களால் தாக்கி படுகாயப்படுத்தியுள்ளனர் !

ஏப்ரல் 3-ம் நாள் பொன்னகரத்தில் உள்ள ஆசீர்வாதம், சுப்பையா என்ற தோழர்களின் கடையில் புகுந்து தோழர்களை தாக்கியும், பொருட்சேதம் விளைவித்தும் காலித்தனம் செய்திருக்கின்றனர்.

4-ந் தேதி காலை பாண்டியன் ஆலைத் தொழிலாளி பெருமாள் என்ற தோழரை ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

கடந்த நான்கு நாட்களாகச் சென்னையில் தங்கி இருந்து மதுரைக்குத் திரும்பிய மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் செய்தியறிந்து, தாக்குதலுக்கு ஆளான தோழர்களிடம் நேரில் சென்று ஆறுதல் சொல்லி வருகிறார்; மேலும் அமைதி காக்க முயன்றுவருகிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—4—57 வெள்ளி

போலிச் சமாதானம்!

★

சட்டசபை கூடுவதற்கென்றே மவுண்ட்ரோடில் உள்ள அரசாங்கப் பெரும் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வசதியான கட்டிடத்தில், இது வரை சட்டசபைக் கூட்டங்கள் நடைபெற்றுவந்தன. இனிமேல் சட்ட சபைக் கூட்டங்களை, முன்பு சட்டசபைக்கூட்டங்கள் நடைபெற்றுவந்த - கோட்டையில் உள்ள பழைய கட்டடத்திற்கு மாற்றுவது என்று சென்னை அரசாங்கம் முடிவு கட்டிவிட்டது.

அந்த மாற்றத்தைக் கண்டித்து நாம் எழுதியிருந்தோம். நமது கழக சட்டசபை உறுப்பினர்களும் ஒன்றுகூடிய முதல் கூட்டத்திலேயே, அரசாங்கத்தின் அப்போக்கைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

அதைக்கண்ட அரசாங்கம் அக்கண்டனத்திற்கு பதிலளிக்க முன்வந்திருக்கிறது. இவர்கள் யார்—இவர்கள் கண்டனத்திற்கு நாம் என்ன சமாதானம் கூறுவது என்று இருந்துவிடாமல், பொருந்தக் கூடாததாக இருந்தாலும், ஏதோ சமாதானம் என அரசாங்கம் கூற முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

1952-பொதுத் தேர்தலுக்கு முன்பு 214 உறுப்பினர்களைக் கொண்டிருந்த சட்டசபை, இனி, சட்டசபைக் கூடயிருக்கும் கோட்டைக்கூடத்தில்தான் கூடி பணியாற்றிவந்திருக்கிறது; அப்பொழுது எந்தவித வசதிக் குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, 206 உறுப்பினர்களை மட்டுமே கொண்டு இயங்கப்போகிற சட்டசபை, அதே கோட்டைக் கூடத்தில் கூடிப் பணிபுரிவதில் ஏற்படக்கூடிய வசதிக் குறைவு எதுவும் இருக்காது என்ற வாதத்தைக் காட்டி, சட்டசபை இடம் பெயர்த்தல் நியாயம் என்கிறது அரசாங்கம்.

இது மட்டுமேயன்றி வேறு ஒரு காரணத்தையும் குறிப்பிட்டு, தனது செயல் நியாயமானதே என்கிறது அரசாங்கம். அதாவது, சட்டசபைக் கூட்டத்தை அரசாங்க பெரும் நிலப்பரப்புக் கூடத்திலும், மேல்சபைக் கூட்டத்தை கோட்டைக் கூடத்திலும் ஒரே காலத்தில் கூட்டுவதில் தொல்லை இருந்து வந்ததாகவும், இப்புதிய மாற்றத்தினால் இனி அத்தொல்லைக்குத் துளியும் இடமிருக்காது என்றும் அரசாங்கம் நியாயம் பேசுகிறது.

இன்று, மேல்சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுவரும் கோட்டைக் கூடத்தில்தான் முன்னாள் சட்டசபைக் கூட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. மேல்சபைக் கூட்டத்தை கமிட்டி அறைக்கும், முன்னாள் சட்டசபைக் கூட்டம் நடைபெற்று வந்த கோட்டைக்கூடத்தில் புதிய சட்டசபை கூட்டத்தையும் நடத்துவதின் மூலம், ஒரே நேரத்தில் இரு சபைக் கூட்டத்தையும் நடத்துவதிலிருக்கும் சங்கடத்திற்கு இனி இடமே இருக்காது என்கிறது அரசாங்கம்.

இப்புதிய மாற்றத்திற்கான கட்டிடத் திருத்தங்களுக்காக செலவழிக்கப்பட இருக்கும் தொகை ஒரு இலட்ச ரூபாயுக்கும் குறைவானதுதான் என்றும், மற்ற கட்டிட நிர்மாணங்களுக்கும், அதற்காக செலவழிக்கப்படப் போகும் இரண்டு இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டத் தொகைக்கும், புதிய சட்டசபை மாற்ற ஏற்பாட்டிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்றும் அரசாங்க அறிக்கை அறிவிக்கின்றது.

புதிய சட்டசபையை அமைக்கும் வகையில் 48,000 ரூபாயும், மேல்சபை ஏற்பாட்டிற்காக 22,500 ரூபாயும் மட்டுமே தான் செலவாகக்கூடும் என்றும் அரசாங்க அறிக்கைக் குறிப்பிட்டிருக்கிறது.

இவ்வளவையும் குறிப்பிட்டுள்ள அரசாங்கம், சட்டசபை மாற்றத்தை மேற்கொண்டதின் காரணமாகத் தனக்கே ஏற்பட்டுள்ள குழப்பத்திலிருந்துத் தெளிவு பெற முடியாத காரணத்தாலோ என்னவோ, அரசாங்க பெரும் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் சட்டசபைக் கூட்டம் இதுவரை நடைபெற்று வந்தது ஒரு தற்காலிக ஏற்பாடேயாகும் என்றும், அக்கட்டிடமே அதே கருத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டது என்றும் அரசாங்கம் தனது அறிக்கையில் எடுத்துக் காட்டி இருக்கிறது.

இவ்வளவும் கூறியுள்ள அரசாங்க அறிக்கையில், எதிர்ப்பின் அடிப்படைக் கருத்துக்கு சமாதானம் என எதையும் குறிப்பிடக் காணோம். மக்கள் அனைவரும் தெரிந்துள்ள விஷயத்தைத்தான், மிக மிகச் சிரமப்பட்டு, தேடிக் கண்டு பிடித்து சமாதானம் எனக் கூறவந்திருக்கின்றது அரசாங்கம்.

கோட்டையில் சட்டசபைக் கூட்டப்பட்ட காலத்திலிருந்து மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும், இப்பொழுதுள்ள மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் எத்தனையோ மடங்கு வித்தியாசம் உண்டு. சனநாயக உணர்வை அன்றிருந்த மக்கள் அறிவை பெற்றிருக்கவில்லை. ஆனால் இன்றோ, சனநாயகம் பற்றிய பொதுப்படையான உணர்வைப் பெறாதில்லாத மக்களே கிடையாது.

சட்டசபை நிகழ்ச்சிகளை பெரும்பாலான பொதுமக்கள் காணக்கூடிய வசதியும் வாய்ப்பும் கிடைக்கக்கூடியவகையில் மவுண்ட்ரோட் கட்டிடம் அமைந்திருக்கிறது. அத்தகைய வசதியையும் வாய்ப்பையும் கோட்டைக்கூடத்தால் மக்களுக்கு அளிக்கமுடியாது. இதை அடிப்படையாகக் கொண்டுதான், சட்டசபையை மாற்றும் அரசாங்க முயற்சிக்குக் கண்டனம் கிளம்பியது.

206 உறுப்பினர்களும் கூடி சட்டசபைக் கூட்டத்தை, கோட்டைக் கூடத்தில் வசதியாக நடத்த முடியுமா முடியாதா என்பதல்ல பிரச்சினை. சட்டசபை நிகழ்ச்சிகளை பெருவாரியான பொதுமக்கள் கூடியிருந்து கண்டு, அரசியல் புத்தறிவு பெறுவதற்குரிய வாய்ப்பு மவுண்ட்ரோட் சட்ட மன்றத்தில் கிடைத்துவந்ததுபோல் கோட்டை கூடத்தில் கிடைக்க முடியாதே என்பதுதான் கண்டனத்தின் அடிப்படை. அதற்கு பதில்கூறாத அரசாங்க அறிக்கை பேசாமடைந்தையாக இருக்கிறது.

இன்றுள்ள சட்டசபைக் கட்டிடத்தைக் கட்டும் பொழுதே, அதில் தற்காலிகமாகத்தான் சட்டசபைக் கூட்டங்களை நடத்தவேண்டும் எனத் தீர்மானித்துக் கட்டப்பட்டதா அல்லது வேறு நினைப்பில் கட்டப்பட்டதா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகக் கண்டனம் கிளம்பவில்லை. கண்டனம் கிளம்பாத பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருப்பது நகைப்புக்குரியதாகும்.

சட்டசபையும், மேல் சபையும் குறிப்பிட்ட கோட்டைப் பகுதியிலேயே ஒரே காலத்தில் இனிமேல் நடைபெறுவதற்கு வசதி கிடைக்கும் என்றும், அதன் பலனாக வெவ்வேறு இடங்களில் இரு சபைகளும் இதுவரை நடைபெற்றுவந்ததிலிருந்தத் தொல்லைகள் இனி தவிர்க்கப்பட்டுவிடும் என்றும், அரசாங்க அறிக்கை விளக்கம் தருகிறது.

குறிப்பிட்ட கோட்டைப் பகுதியிலும்கூட சட்டசபை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், மேல் சபைக் கூட்டத்தை நடத்துவது என்பது ஒருக்காலும் முடியாது. குறிப்பிட்ட ஒரு அமைச்சர் சட்டசபையிலிருந்துத் திரவேண்டியதுபோன்றே, அதே நேரத்தில் கூடும் மேல் சபையிலும் அவர் இருந்துத் திரவேண்டிய கட்டாயம் ஏற்படுவது நிச்சயம். எனவே, குறிப்பிட்ட கோட்டைப் பகுதிக்குள்ளாகவே, இரு சபைகளின் கூட்டத்திற்குரிய இட வசதி செய்து விடுவதின் மூலமாக, ஒரே நேரத்தில் இரு சபைகளையும் பணிபுரியச் செய்வது என்பது என்றும் நடைமுறைக்கு ஒத்துவராது. இவ்வாதத்தை அரசாங்க அறிக்கை எடுத்துக் காட்டி இருப்பது முதல்தரமான ஏமாற்று வித்தையாகும்.

அரசாங்கப் பெரும் நிலப்பரப்பில் சட்டசபை மண்டபம் மட்டுமே கூட்டப்பட்டிருக்கவில்லை. அதை ஒட்டி சட்டசபை உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் இன்றியமையாக் கட்டடங்கள் பலவும் கட்டப் பட்டுள்ளன. அங்கு தங்கியுள்ள சட்டசபை உறுப்பினர்கள் சட்டசபை கூட்டம் நடைபெறும் பொழுது, கோட்டைக்கு குறித்த காலத்தில் வருவதிலுள்ள சங்கடத்தைத் தவிர்க்கவே முடியாது. அது போன்றே பொதுமக்களும் சட்டசபைக்கு வருவது என்பதும் சங்கடமானதாகும். சட்டசபை மாற்றம் மக்களை ஒதுக்கித் தள்ளும் சனநாயக விரோதமான எதேச்சாதிகாரம் என்பதே நமது கருத்து. அக்கருத்தை மாற்றிக் கொள்வதற்கான நியாயமான காரணம் எதுவும் அரசாங்க அறிக்கையில் இடம் பெற்றிருக்கவில்லை. எனவே, அரசாங்க அறிக்கை அப்பட்டமான போலிச் சமாதானமேயாகும்.

'உயர்ந்த நோக்கம்' விரிவடைகிறது?

உள்ளாட்சிக் கழக ஊழியர்களும் கிராக்கிப்படி உயர்வு பெறுவதற்கு சர்க்கார் உத்தரவிட்டனர்

துவக்க — இடைநிலை கிரேடு ஆசிரியர்களுக்கு தனி உத்தரவு பிறப்பிக்கப்படுமாம்

சென்னை, எப். 4—

முனிசிபாலிடிகள், மாவட்டக் கழகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் (எலிமெண்டரி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தவிர) எல்லா ஊழியர்களுக்கும் சென்னை அரசாங்க ஊழியர்களுக்கு இப்போது தரப்படும் அதே விகிதங்களில் மார்ச் முதல் தேதியிலிருந்தே கிராக்கிப் படியைக் கணக்கிட்டுத் தருமாறு சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தக் கிராக்கிப்படி சம்பந்தமாக அமுலில் உள்ள விதிகள், நகரசபை, மாவட்ட மன்றம், ஊராட்சி மன்றம் ஆகிய நிர்வாக அதிகாரிகளுக்கும் பொருந்தும்.

ஆனால், செகண்டரி, எலிமெண்டரி ஆசிரியர்களுக்கு இந்த உத்தரவு அமுல் செய்யப்படமாட்டாது. ஆசிரியர்களுக்குத் தனியாக உத்தரவு பிறப்பிக்கப்படுமாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊழியர்களுக்கும் இப்போதைய விகிதம் அமுல் செய்யப்படமாட்டாதாம்.

இந்தப் புதிய விகிதங்களின்படி ஏற்படும் அதிகப்படியான செலவை பல்வேறு மன்றங்கள் சரிக்கட்டிக் கொள்வதற்கு சென்னை அரசாங்கம் தேவையான தொகையை மானியமாக வழங்க இசைந்துள்ளதாம்.

'கோளாறு உள்ள இடம் எனக்குத் தெரியும்'

'சுலபமாக என்னை ஏமாற்றிவிட முடியாது' என்கிறர் சேதுபதி

சென்னை, எப். 3—

"அரசாங்கம் தன் ஊழியர்களைத் திருப்தியுடன் வைத்துக் கொள்ளவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய கருத்தும் அதுவேயாகும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, நான் அமைச்சராக இல்லாவிட்டாலும்கூட சாதாரண சட்டசபை உறுப்பினராக இருந்துகொண்டே உங்களுக்காகப் போராடுவேன். கோளாறு எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்; எனவே, என்னைச் சுலபமாக ஏமாற்றிவிட முடியாது"

என்று, மராமத்து இலாகா அமைச்சர் சண்முக இராஜேசுவர சேதுபதி அவர்கள், மின்சார எஞ்சினீயர்கள் சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்;--

"மின்சார இலாகாவை நிர்வகிப்பது சம்பந்தமாக ஒரு போர்டு நியமிக்கப்படும் வரையில் உருப்படியாக ஒன்றும் செய்ய இயலாது. ஊழியர்கள் நலனைக் கருத்தில்கொண்டு நோக்கினால், அந்தப் போர்டு அமைக்கப்படுவது ஒரு இலட்சிய நிறைவேற்றமாகும். ஊழியர்களின் தேவைகளை அந்தப் போர்டு உடனே கவனிக்கும்."

அடிப்படைக் காரணம் தெரியவில்லை!

ஈரான் பிரதமர் விலகியதேன்?

தெஹ்ரான், எப். 3—

ஈரான் நாட்டின் முதலமைச்சர் உசேன்அலி பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இதற்கு அடிப்படைக் காரணம் தெரியவில்லை.

அரண்மனை அமைச்சர் மனூச்சர் எக்பாலே முதலமைச்சராக மன்னர் நியமித்துள்ளார்.

வடநாட்டு அணைத் திட்டம்

மத்திய சர்க்கார் மேலும் ரூ. 1-கோடி அனுமதித்தது

புதுடில்லி, எப். 4—

இந்திய சர்க்கார், கொய்னு நதி மீது அமைக்கப்படுகிற காங்கிரீட்-கட்டுமான அணைத் திட்டத்துக்காக பம்பாய் சர்க்காருக்கு ரூ. 1-கோடி கடன் தொகை அனுமதித்துள்ளனர். இத்துடன் சேர்த்து இத்திட்டத்துக்கு இதுவரையில் மொத்தம் ரூ. 4,10,00,000 வழங்கப்பட்டிருக்கிறது.

கொய்னு மின்சாரத் திட்டத்தின் முதல் கட்டம் பூர்த்தியடைவதற்கு ரூ. 38,28,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முதலாவது கட்டத்தில் 2,2000 அடி நீள அணை ஒன்று கட்டிமுடிக்கப்படும். அதன் உயரம் ஆற்றுப் படுகை மட்டத்திலிருந்து சுமார் 207·5 அடி இருக்கும்.

முதலாவது கட்டத்தில் நிர்மாணிக்கப்படும் மின்சார சாதனம் 2,40,000 கிலோவாட் உற்பத்தி சக்தி வாய்ந்ததாக இருக்கும். திட்டம் முழுவதும் நிறைவேற்றி வைக்கப்படும்போது, இது 4,80,000 கிலோவாட் உற்பத்தி சக்தி கொண்டதாக இருக்கும்.

டில்லிப் பேரரசின் மற்றொரு விஷமம்!

'இந்தி'யில் பூகோளப் படமாம்

புதுடில்லி, எப். 2—

இந்திய பூகோள அமைப்பின் உட்பிரிவுகளை விளக்கிடும் 25 படங்கள் அடங்கிய ஒரு தேசப் பட விளக்க நூலை (அட்லாஸ்) இந்தியில் தயாரிக்க இந்திய தேசிய அட்லாஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளதாம்.

வரும் செப்டம்பர் திங்களில் இது வெளியாகிவிடுமாம்.

சென்னை, ஆந்திரம், ஒரிசா, அசாம், பீகார், பம்பாய், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகியவை அடங்கிய 6,000 சதுரமைல் பரப்பளவில் 'பூகோள சர்வே' முடிந்துவிட்டதாம்.

மத்திய ஆட்சியில்!

ஒழிக்கப்பட்ட பதவி மீண்டும் உருவாகும்?

புதுடில்லி, எப். 4—

சர்தார் படேலுக்குப் பிறகு ஒழித்துவிடப்பட்ட துணைப் பிரதமர் பதவி மீண்டும் மத்திய ஆட்சியில் உருவாக்கப்படக் கூடுமாம்.

இப்பதவியை மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஏற்கக் கூடுமென்றும், வேறு எந்த இலாகா பொறுப்பையும் அவர் ஏற்கமாட்டார் என்றும் கூறப்படுகிறது.

அனுபவத்திற்குப் பின் இந்தத் திட்டம்?

புதுடில்லி, எப். 4—

அடுத்த ஆண்டு முதல் வடநாட்டிலுள்ள - டில்லி, காசி, அலிகார், சாந்திநிகேதன் ஆகிய பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியையோ அல்லது மற்ற தென்னிந்திய மொழியையோ மாணவர்களுக்குக் கற்றுத் தருவதற்கான திட்டமொன்றை மத்திய அரசாங்கம் தயாரித்து வருகிறதாம்.

17 மாடிகள் கொண்ட கட்டடம் உருவாகுமாம்

20 இலட்சம் பவுன் செலவாகும்

இலண்டன் நகரின் மத்தியில் 225 அடி உயரமுள்ள 17 மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதைக் கட்டிமுடிக்க சுமார் 20 இலட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வெறும் எச்சரிக்கையுடன் நின்றுவிடாத நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்!

முழு ஜெர்மனியிலும் புதியதோர் சிக்கல் ஏற்படுமென அச்சுறுத்தல்

பெர்லின், ஏப். 3—

மேற்கு ஜெர்மனியில் அணுசக்தி ஆயுதங்கள் வைக்கப்பட்டு இருப்பதுபற்றி கிழக்கு ஜெர்மனியின் கம்யூனிஸ்டுப் பிரதமர் எச்சரித்துள்ளாராம்!

'மேற்கு ஜெர்மனியிலுள்ள இராணுவத்தினருக்கு அணுசக்தி ஆயுதங்கள் கொடுக்கப்பட்டால், கிழக்கு ஜெர்மனியில் அதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்; வெறும் எச்சரிக்கையுடன் அந்நடவடிக்கை நின்றுவிடாது; அதனால், ஜெர்மனி முழுமைக்குமே புதிய தொல்லைகள் ஏற்படும்' என்று அவர் எச்சரித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானுக்கு ரூ. 5-கோடி உதவி

இரசாயன உற்பத்தித்தொழிற்சாலை நிறுவ அமெரிக்கா உதவுகிறது

கராச்சி, ஏப். 2—

பாகிஸ்தானில் இரண்டு இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு அமெரிக்கா ரூ. 5-கோடி உதவியளிக்க முன்வந்துள்ளதாம்.

ஒரு தொழிற்சாலை கிழக்குப் பாகிஸ்தானிலும், மற்றொன்று மேற்குப் பாகிஸ்தானிலும் நிறுவப்படும் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊதிய உயர்வு கோரினர்!

துப்பாக்கி வேட்டுக்கு இரையாகிவிட்டனர்

டாக்கா, ஏப். 3—

சிட்டகாங்கில் உள்ள சணல் ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்திருந்த தொழிலாளர்கள்மீது இன்று போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்; இருவர் கொல்லப்பட்டனர்-20 பேருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

சுமார் 6,000 தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் உயர்வு கோரி நேற்று முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனராம்.

அரியலூர் விபத்து நஷ்டஈடு மனுக்கள்

அனுமதிக்கப்பட்டுள்ள தொகை பற்றித் தகவல்

சென்னை, ஏப். 3—

அரியலூர் இரயில் விபத்தில் சிக்கிப் பலியானவர்களின் சார்பில் 262 பேர் நஷ்டஈடு கோரி மனுச் செய்துகொண்டனர்; இது வரையில் 165 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மொத்தம் ரூ. 4,01,791—14—0 நஷ்டஈடு தரப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

விபத்தில் சிக்கி மாண்ட பாடகி சாவித்திரி-கணேசனின் கணவருக்கும், 8 வயதுள்ள மைனர் புதல்வனுக்கும் ரூ. 10,000 வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச தொகையாகும் இது. கணவர், மகன் இருவருமே அந்தத் தொகையைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என உத்திரவு குறிப்பிடுகிறது.

தரையில் விழ்ந்த மீனின் நிலைமையாம்!

பண்டிதரின் வர்ணனை

புதுடில்லி, ஏப். 2—

"குழந்தைகள் சுலபமாகப் பல மொழிகள் கற்றுக்கொள்ளலாம்; அது கஷ்டமானதல்ல. வயதான பின்பு பல மொழிகள் கற்பது கடினம்" என்று பண்டித நேரு கூறியுள்ளார்.

'வயதானவர்கள், தங்களுடைய தாய்மொழி அல்லாத பிறமொழி பயிலுவது இலகுவானதல்ல; தண்ணீரை விட்டுத் தரையில் வீழ்ந்த மீன்போன்று அவர்கள் கஷ்டப்படுகின்றனர்' என்றும் அவர் கூறியுள்ளார்.

வானளாவி நிற்கும் உயரமான கட்டடம்

250 மைல் வேகத்தில் விசும் காற்றையும் எதிர்ந்து நிற்கும்

1,620 அடி உள்ளதாம்

ராஸ்வெல், நியூமெக்சிகோ—

மணிக்கு 250 மைல் வேகத்தில் வீசும் காற்றையும் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தியைப் பெற்றுள்ள கட்டடம் ஒன்று இங்கு நிர்மாணமாகியுள்ளது.

உலகின் மிகவும் உயரமான மனிதனால் உருவாக்கப்பட்ட இக்கட்டடம் 2,620 அடி உயரமுள்ளதாம்! நியூயார்க் நகரில் வானளாவி நிற்கும் 'எம்பயர் ஸ்டேட்' கட்டடம் 1,250 உயரம் மட்டுமே கொண்டிருக்கிறது.

வாகன வரிகள் பற்றி சர்க்கார் உத்தரவு

சென்னை, ஏப். 3—

சென்னை வாகன வரி விதிப்பு சட்டத்தின்கீழ் 1957 ஏப்ரல் மாதத்திலிருந்து தொடங்கும் காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரிகள் தசாம்ச நாணய முறையிலேயே செலுத்தப்படவேண்டும் என்று சென்னை அரசாங்கம் அறிவித்துள்ளது.

சரித்திர வரலாறு வரைவதற்குபரிசு

ரூ. 5,000 தர இந்தியப் பேரரசு முன்வந்துவிட்டது

சென்னை, ஏப். 3—

இந்தியாவின் சரித்திரம் பற்றி எழுதி அனுப்பப்படும் சிறந்த பிரதிக்கு ரூ. 5,000 பரிசளிக்க இந்திய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

சரித்திரப் பேராசிரியர்கள், நிபுணர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 50,000 வார்த்தைகளுக்கு மேற்படாமல் பிரதிகள் இருக்க வேண்டுமாம்!

அதிகாரிகளுக்கு அறிவுரை!

பாரபட்சம் காட்டும் இயல்பு கூடாது என்கிறர் இராசேந்திரர்

புதுடில்லி, ஏப்; 3—

"அரசியல் கட்சிகளின் வற்புறுத்துதல்களை பொருட்படுத்தாமலும், பாரபட்சம் காட்டாமலும், எப்போதும் நேர்மையாக ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் நடந்துகொள்ளவேண்டும்," என்று ஐ. ஏ. எஸ். பயிற்சிக் கல்லூரியில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளுக்கு தலைவர் இராசேந்திரபிரசாத் அறிவுரை கூறியுள்ளார்.

"நாட்டின் பல பாகங்களில் இன்னமும் சாதி உணர்ச்சியும் வெறுப்புகளும் நிலவிக்கொண்டுதான் இருக்கின்றன; அதிகாரிகள் இந்த உணர்ச்சிக்கு இரையாகக்கூடாது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சம்மதித்து விட்டாராம்!

புதுடில்லி, ஏப். 4—

துணைக் குடியரசுத் தலைவர் பதவி வேண்டாமென்று இது வரையில் மறுத்துவந்த டாக்டர் இராதா கிருஷ்ணன், அப்பதவியின் தேர்தலுக்குக் காங்கிரஸ் சார்பில் நிற்பதற்கு சம்மதித்து விட்டாராம்.

சத்தியவாணிமுத்து வெற்றிக்குப் பாராட்டுக் கூட்டம்

மு. கருணாநிதி, சிற்றரசு கலந்துகொண்டனர்

3—4—57 மாலை 7-மணியளவில், சென்னை-சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், பெரம்பூர் தனித் தொகுதிக்கு தி. மு. கத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டி, சூளை-கலியாணமேஸ்திரி தோட்டத்திற்கு அருகில், தோழர் எம். சின்னசாமி தலைமையில் மாபெரும் பாராட்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் துவங்குவதற்குமுன் தோழர் மணி இயக்கப் பாடல்கள் பாடினார்.

தலைவரின் முன்னுரைக்குப் பின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், அரசியலார் நம்முடைய கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் மிகுந்த தொல்லை கொடுப்பதையும், மவுண்ட்ரோடிலுள்ள சட்டமன்ற கட்டடத்தை விட்டுவிட்டு, கோட்டையில் சட்டமன்றத்தை கூட்டுவதையும் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

அடுத்து தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தான் வெற்றிபெற்றது பெரம்பூர் மக்களின் வெற்றி என்றும், தனக்குப் பெரும்வாக்களித்து பெருமைப் படுத்திய தொகுதி மக்களுக்கும் —குறிப்பாகத் தாய்குலத்திற்கும், தன்னை பாராட்டி சிறப்பு செய்வதற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'தோழியர் சத்தியவாணிமுத்து வெற்றி—தாய்க்குலம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வைத்திருக்கும் அன்பை—ஆர்வத்தைக் காட்டும் ஒரு நல்ல சான்றாகும்' என்றும் நம்மை தேர்தலில் எதிர்த்தவர்களைப்பற்றியும், ஆட்சியாளர் அலங்கோலத்தையும் எடுத்துக் காட்டி சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில், சூளை வட்டத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டியதைப் பற்றியும், தண்ணீர்வசதி இல்லாமைக் குறித்தும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேறின.

சொற்பொழிவாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்ட முடிவில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், ஓர் பெண் மகவுக்கு 'சத்தியவாணி' என்று பெயர் சூட்டினார்.

ஆசிரியருக்குக் கடிதம் :

வெள்ளையரின் அரசுக்கும் இன்றைய அரசுக்கும் வேறுபாடுதான் என்ன?

ஐயா,

இன்றையஅரசாங்க ஊழியரின் அவல நிலை எல்லோரும் அறிந்ததே; அவர்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு விடுத்துக்கொண்டேயிருந்தனர். பயனில்லாமற் போகவே, ஒரு திங்களில் முதல் நாள் சம்பளம் வாங்க மறுப்பதென்றும், ஒரு நாளில் ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென்றும் எச்சரிக்கை விடுத்தனர். அதற்குப் பிறகு அவர்களையே பலவிதங்களில் அச்சுறுத்திவிட்டு, முதலில் ஐந்து ரூபாயும், பிறகு எழு ரூபாயும் கொடுக்கிறது அரசாங்கம். அந்த எழு ரூபாயையாவது சென்ற நவம்பர் திங்களிலிருந்தே தரும்படி வேண்டிக் கொண்டும் இது வரை யாதொரு பயனுமில்லை.

மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தைப்போல தங்களுக்கும் தருமாறு அவர்கள் வேண்டியும் இதுவரை ரூபாய் 12 மட்டும் அதிகமாகத் தருகின்றது, சென்னை அரசு! அந்த 'வரப்பிரசாத'மே அவர்களுக்குப் போதுமென்று அரசாங்கம் நினைக்கின்றதா? அல்லது 'சென்னை அரசாங்க ஊழியர்கள் சிக்கனமுடையவர்கள்' என்ற திரு. நேரு அவர்களின் கூற்றைச் சென்னை அரசு ஆமோதிக்கிறதா? மத்திய அரசாங்க ஊழியர்களிடையேயும், சென்னை அரசாங்க ஊழியர்களிடையேயும் ஏன் இந்தச் சம்பள வேறுபாடு? மத்திய அரசாங்க ஊழியர்களின் தவிர்க்க முடியாத செலவுகள்தாம் எவை? சென்னை அரசாங்க ஊழியர்கள் செய்யும் அநாவசியமான செலவுகள்தாம் எவை? அன்று வெள்ளை அரசு செய்த வியாக்கியானத்திற்கும், இன்று மத்திய—சென்னை அரசுகள் செய்யும் வியாக்கியானங்களுக்கும் என்னதான் வேறுபாடு?

இவ்வளவு குறைந்த சம்பளத்தில் பணி புரியும் சென்னை அரசாங்க ஊழியர்கள் முழு நேர ஊழியர்களா? பகுதி நேர ஊழியர்களா? அலுவலக நேரங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது (காலை 11மணிமுதல் மாலை5மணி வரை போன்ற நேரங்கள்) எற்றுக்கு? பொது மக்களுக்காக மட்டுமா? அல்லது அதிகாரிகளுக்கு மட்டுமா? ஞாயிற்றுக்கிழமைகளும் மற்ற அரசாங்க விடுமுறைகளும் அரசாங்க ஊழியர்களுக்காக விடப்படும் விடுமுறை நாட்கள் அல்லவா? வேலை நாட்களில் 11 மணிக்கு முன்பும், மாலை 5 மணிக்குப் பிறகும், விடுமுறை நாட்களிலும் அலுவலகங்களுக்கு வந்து பணிபுரிய வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது முறையா? எந்த நாளில் எந்த நேரத்தில் அதிகாரி ஆணையிட்டாலும் அப்போது வந்து வேலை செய்துதான் தீரவேண்டும் என்ற கட்டாயம் உண்டா? அப்படி வேலை செய்தும், சாப்பிடுவதற்கோ அல்லது வேறு எதாவது முக்கியமான வேலையின் பொருட்டோ சென்று கொஞ்ச நேரங்கழித்து வந்தாலும் அவர்களை மிரட்டுவதும், தண்டிப்பதும் நீதியா? அதிகாரிகளுக்கும்—தலைமை குமாஸ்தாக்களுக்கும் சாப்பாடு கொண்டு வருவதற்கும் மற்ற வேலைகளைச் செய்வதற்கும் ஆட்களிருக்கின்றார்கள். எங்கும் போகாமல் இருக்கும் இடத்திலேயே சாப்பிட முடிகிறது அவர்களால்; மற்ற ஊழியர்களாலும் அது முடியுமா?

இங்ஙனம், அதிகாரிகளின் ஆணைக்கும் — அச்சுறுத்தலுக்கும் அரசாங்க ஊழியர்கள், ஒன்று— அஞ்சி வேலை செய்து தீரவேண்டும்; அல்லது, 'வேலை செய்வது மாதிரி' காட்டிக்கொள்ள வேண்டும். இது என்றைக்கும் எல்லோராலும் இயலுமா? நன்றாக வேலை செய்பவன், என்றும் செய்துகொண்டுதான் இருக்க வேண்டும்; அவனைத்தான் அதிகாரிகள் 'உனக்கு வேலை மிகக் குறைவுதானே! அதையும் ஏன் செய்யக்கூடாது? இதையும் ஏன் செய்யவில்லை?' என்று மிரட்டுகிறார்கள். ஆனால், வேலை செய்வது மாதிரி காட்டிக் கொள்பவனை ஒன்றும் கேட்பது இல்லை; அது மாத்திரமன்று; அவன் அதிகாரியின் அன்புக்குப் பாத்திரமாகிப் பலவித சலுகைகளையும் பெறுகின்றான்.

இவற்றையெல்லாம் அரசாங்கமும், அதிகாரிகளும் சிந்தித்து, 'அரசாங்க ஊழியர்களும் மனிதர்கள்; உணர்ச்சி உள்ளவர்கள்; அவர்களுக்கும் மனைவியுண்டு; மக்கள் உளர்; உற்றாரும் உறவினரும் உளர்,' என்ற முடிவுக்கு வந்து அவர்களிடமிருந்து சட்டத்திற்கு உட்பட்ட உழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அரசாங்க ஊழியர்களும் அவர்களுடைய சங்கம் கேட்டுக்கொண்டுள்ளவாறு குறிப்பிட்ட அலுவலக நேரங்களில் மட்டும் நன்றாகப் பணிபுரிந்து மற்ற நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் அலுவலகம் சென்று பணி புரியாமலும், வேலைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்று செய்யாமலும் இருக்கும்படி வேண்டிக்கொள்கின்றேன். கட்டாயப்படுத்தினால் - அச்சுறுத்தினால் எல்லோருக்கும் நீதி வழங்கும் நீதிமன்றம் ஏழை அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் இல்லாமலா போய்விடும்?

மாட்டுக்கும் ஓய்வுண்டு; மதிக்கப்படுகிறது மக்களால்! மலந் தின்னும் பன்றியும் நன்றாக வாழ்கின்றது! ஆனால், மனிதராய்ப் பிறந்து அரசாங்க ஊழியர்களாகி விட்டவர்கள் மட்டும் வாழக்கூடாதா? வாழ முடியாதா?

ஓர் அனுதாபி

கிளர்ச்சிநடத்ததுணிந்துவட்டனர்

இலட்சமணபுரி, ஏப். 3—

வேலையில்லாத் திண்டாட்டம், நிலவரி வசூல் முறை, போலீஸ்—சட்ட இலாகா இயங்கும் முறை ஆகியவற்றை எதிர்த்து உத்திரப் பிரதேச மாநிலத்தில் சோஷலிஸ்டுக் கட்சி போராட்டம் துவக்கக்கூடும் என்று தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

14-4-57 ஞாயிறு அன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலையில் நடைபெறும்.

சென்னை 'அறிவகம்' 1—4—57 } தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருவையாறு

'நம் நாடு' விற்பனையாளர்

எம். வடிவேலு,
(ஜெயம் தியேட்டர் எதிரில்)
தெற்கு வீதி, திருவையாறு.

காவேரிப்பட்டணம்

'நம்நாடு' விற்பனையாளர்

வே. பெ. பெருமாள்
புத்தக நிலையம்,
காவேரிப்பட்டணம்;
சேலம் மாவட்டம்.

‘எனக்கே பேராதரவு’ என்கிறார் நிதி அமைச்சர்!

‘எனக்கே எண்ணிக்கை பலம்’ என்கிறார் முதல் அமைச்சர்!

தி. மு. க. துவக்கவிழா பொதுக்கூட்டம்

★

நெ. 82 நண்டலம் கிராமத்தில் 7—4—57 மாலை 6-மணிக்கு

தலைவர் : ஏ. குப்புசாமி

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

ஆர். எஸ். பாண்டியன்

டி. என். சம்பந்தம்

டி. கே. எஸ். சகோதரர்களுக்கு வழியனுப்பு உபசார விழா

7—4—57 காலை 9-மணிக்கு சென்னை—இராசா அண்ணாமலை மன்றத்தில், ‘பாரத் பைன் ஆர்ட்ஸ்’ சபையினரால், கலைப் பணியாற்ற மலேயா செல்லவிருக்கும் டி. கே. எஸ். சகோதரர்களுக்கு வழியனுப்பு உபசாரவிழா நடைபெறும். பல கலைக் கழகங்களும், அறிஞர்களும் கலைஞர்களும் அந்த விழாவில் கலந்துகொள்வர்.

குடந்தை தேசிய தபால்—தந்தி தொழிலாளர் சம்மேளனம்

7—4—57 மாலை 6½ மணிக்கு குடந்தை ஜூப்ளி பார்க்கில், தபால்—தந்தி சங்க இணைப்புக் குழு சார்பில் தோழர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் தலைமையில் மேற்படி சம்மேளனத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், டி. வி. இராமமூர்த்தி, எம். குழந்தைவேலு, பி. எம். கிருஷ்ணன், என்.சி. அம்பலவாணன், ஜி. இலட்சுமணன், எம். எஸ். உசேன் முனவர் பே ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-தொண்டையார்பேட்டை தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

7—4—57 காலை 9½ மணிக்கு சென்னை—தொண்டையார்பேட்டை (முதல் வட்டம்) தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டடத்தில் நடைபெறும்; அதுபோது வரவு-செலவுகள் ஆய்வுக்கு வரும்.

★★★★★★★★★★★★★★★★★★

பெத்துநாய்க்கன்பேட்டையில் மாபெருங் கூட்டம்

★

8—4—57 மாலை 6-மணிக்கு காசிவிசுவநாதர்கோயில் திடலில்

சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

துணைப்பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

மற்றும் பலர் பேசுவர்.

—8-வதுவட்டத் தி. மு. க.

செங்கற்பட்டு மாவட்டக் குழுக் கூட்டம்

7—4—57 காலை 10 மணிக்கு செங்கற்பட்டு மாவட்டக் குழுக் கூட்டம் குன்றத்தூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு கணக்கு பற்றியும், மாவட்ட மாநாடு குறித்தும், நடைபெற்ற தேர்தல் பற்றியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

7—4—57 மாலை 4 மணிக்கு பெங்களூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம், இலக்குமணாபுரி தி. மு. க. கட்டடத்தில் நடைபெறும். அதுபோது, மாவட்ட கழகத்தின் வரவு-செலவு கணக்குகளும், பாராட்டுக் கூட்டம் நடத்துவது பற்றியும், கழக வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளும் ஆய்வுக்கு வரும்.

வெற்றி விழாக் கூட்டம்

அண்ணா கலந்துகொள்வார்

7—4—57 மாலை சென்னை—பதுப்பேட்டை வீரபத்திர ஆச்சாரி தெருவில் (பழைய செக்ரடேரியட் ஆபீஸ் அருகில்) திரு. எம். எஸ். அப்துல் நாசர் தலைமையில் தோழர் க. அன்பழகன் அவர்களின் வெற்றி விழாக் கூட்டம் நடைபெறும்; அண்ணா அவர்களும், தோழர்கள் க. அன்பரசன், எ. கே. வில்வம் ஆகியவர்களும் பேசுவர்.

அன்று பிற்பகல் 1-30 மணிக்கு வட்டக் கழக பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்படும்; தோழர் க. அன்பழகன் கலந்துகொள்வார்.

காலை 9 மணியளவில், கழகப் பணிமனையில் ஏழைச் சிறுவர்களுக்குப் பால் வழங்கப்படும்; 11 மணிக்கு ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும்.

சென்னை—கோடம்பாக்கம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

7—4—57 காலை 8 மணிக்கு சென்னை—கோடம்பாக்கம் (35, வது வட்டம்) தி. மு. க. செயற்குழு கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது, பாராட்டுக் கூட்டம் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்.

அண்ணா சுற்றுப்பயணம்

ஏப்ரல்

7 : காலை — திருமணம் தேனாம்பேட்டை.

,, மாலை — கோமளீஸ்வரன் பேட்டை, திருவல்லிக்கேணி பொதுக்கூட்டங்கள்.

14 : குளித்தலை

15 : மாலை 5 மணி-பொன்மலை இரவு 8 மணி—திருச்சி

16 : பெரம்பலூர் பகுதி

17 : நெல்லிக்குப்பம்

தஞ்சை - அறந்தாங்கி தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

7—4—57 மாலை 6 மணிக்கு, அறந்தாங்கி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

பாரதி விழா

7—4—57 காலை 9½ மணிக்கு கரூர் பாரதி கழகச் சார்பில் பாரதி விழா கரூர் நகர் மன்ற உயர் நிலைப்பள்ளி வைர விழா மண்டபத்தில் ஆரம்பமாகும். 10 மணிக்கு நடைபெறும் கவியரங்கத்திற்கு திரு. ராய. சொக்கலிங்கம் தலைமை தாங்குவார்; பிரமுகர்கள் பலர் பல தலைப்புகளில் கவிதை அரங்கேற்றுவர்.

மாலை 4-20 மணிக்கு திரு. வெ. சூரியநாராயண தலைமையில் பேரவை துவங்கும். பல தலைப்புகளில் பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்; பாரதியார் பாட்டு—பேச்சுப் போட்டிக்கான பரிசுகளும் வழங்கப்படும்.

பீகார் முதல் அமைச்சர் பதவிக்குப் போட்டாபோட்டி

போட்டியின் வெப்பம் 105 டிகிரியாம்!

தணிக்கும் முயற்சி முழு தோல்வி!

‘மாலை நீங்கலாக வெறும் கையுடன் டெல்லி திரும்புகிறேன்’ என்கிறார் ஜகஜீவன் ராம்!

காங்கிரசு சட்டசபைக் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்தான் முதலமைச்சர் பதவியைப் பெறமுடியும். இதன் எதிரொலியாக பீகார் காங்கிரசு சட்டசபைக் கட்சித் தலைவர் பதவிக்கு, தற்போது முதலமைச்சராக இருந்துவரும் கிருஷ்ண சின்னாவிற்கும் அவர் அமைச்சரவையில் நிதி—விவசாய அமைச்சராக இருந்துவரும் டாக்டர் அனுக்கிரக நாராயண சின்னாவிற்கும் பலத்தபோட்டி ஏற்பட்டு இருக்கிறது.

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள் இரு அணியாகப் பிரிந்து, முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடும் இரண்டு ‘சேவா உணர்ச்சி’யாளர்களுக்கும் பின்பலமாக இருந்துவருகின்றனர்.

இவ்விரண்டு பேருக்கும் இருந்துவரும் பதவிப் போட்டியைத் தவிர்க்கக் காங்கிரசு மேலிடம், சாத்தியமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு முயன்று பார்த்துவிட்டது.

காங்கிரசு சட்டசபைக் கட்சித் தலைவர் பதவியையும், அத்துடன் இணைந்துள்ள முதலமைச்சர் பதவியையும் எப்படியும் பெற்றே தீருவது என்ற முடிவில் அவர்களிருவரும் இருக்கின்றனர்: ‘சிறிதளவும் பின்வாங்க முடியாது’ எனத் தீவிரப் புரட்சியில் ஈடுபாடு கொண்டுள்ளனர்!

‘இருவரிடையிலும் மோதிக்கொண்டுள்ள பதவிப் போட்டியைத் தவிர்க்கக்கூடிய ஏதாவது நடுவழி இருக்கிறதா?’ என்று, சமரசம் காண முயற்சித்துக்கொண்டிருக்கும் பார்லிமெண்டரி விவகார மந்திரியான சத்திய நாராயண சின்னாவை நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர் பின்வருமாறு கூறியுள்ளார் :—

“இப்பிணியைக் குணப்படுத்த எம்மிடத்தில் ஒரு ஊசி (மருந்து) இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஏதாவது ஒரு அளவில் வெப்பம் குறைந்த நிலையில்தான் அந்த ஊசியைக் குத்தமுடியும். பிணியாளருக்கு உள்ள வெப்பம் 105 டிகிரியாக இருக்கும் தருவாயில் நான், அந்த ஊசியைக்குத்த முனையமுடியாது.”

சமரசம் காண்பதில் ஈடுபட்டு, உடைந்த மனதுடன் டில்லி திரும்பிய மத்திய மந்திரியான செகசிவன்ராம், ‘மாலை நீங்கலாக வெறுங்கையுடன் டில்லி திரும்புகிறேன்’ என்று நிருபர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நிலை சீர்குலைந்ததால் பாதுகாப்புச் செலவில் வெட்டு!

எகிப்தைத் தாக்கியதால் ஏற்பட்ட நெருக்கடி

அழிவுச் சாதனத்தை உற்பத்திச் செய்வதில் மட்டும் பிரிட்டன் பின்தங்கவில்லை!

லண்டன், ஏப். 4—

பிரிட்டனின் 1957—58-ம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவில் 12,80,00,000 கோடி பவுன் வெட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்!

1956—57-ல் மொத்தம் 154,80,00.000 பவுன் செலவிடப்பட்டது.

1957—58-ல் மொத்தம் 142 கோடி பவுன் செலவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புச் செலவில் இந்த வெட்டு ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம், பிரிட்டன் எகிப்தைத் தாக்கியதால் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்ததுதானாம்! பிரிட்டன் தனது பாதுகாப்புச் செலவை ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்துள்ளது.

பிரிட்டனுக்கு அமெரிக்கா ‘ராக்கெட்’ குண்டுகளை விநியோகிக்கக்கூடுமாம்! ஏற்கனவே, பிரிட்டனில் அணு குண்டுகள் ஒழுங்கான முறையில் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறதாம். தற்போது விமானப் படையின் வசம் தேவையான அளவிற்கு அணு குண்டுகளும் இருக்கிறதாம்!

திருப்பூர் பனியன் பேக்டரி தொழிலாளர் கழக அமைப்புக் கூட்டம்

7—4—57 காலை 10 மணிக்கு, திருப்பூர் பனியன் பேக்டரி தொழிலாளர் கழக அமைப்புக் கூட்டம், திருப்பூர் ‘அறிவுக் கலை மன்ற’த்தில் (20/8, கோர்ட் வீதி) நடைபெறும்; அதுபோது நிர்வாகிகள் தேர்வு நடைபெறும்.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை!

‘நெய்வேலி வெற்றி பெறட்டும்—அதுபற்றி நினைத்துப் பார்க்கலாம்!’

அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் அருள்வாக்கு!

சென்னை, ஏப். 4—

“நெய்வேலித் திட்டம் அமுலாகி அதன் பலாபலன்கள் தெரிந்த பின்னர்தான், சேலம் மாவட்டத்தில் உருக்கு ஆலை ஏற்படுத்துவதைப் பற்றி இந்திய சர்க்கார் மும்முரமாக யோசனை செய்யும்” என்று, தன்னைச் சந்தித்த சேலம் மாவட்டத்திலிருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களிடத்திலும், தாலுகா, மாவட்ட காங்கிரஸ் தலைவர்களிடத்திலும் மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி குறிப்பிட்டிருக்கிறார்.

“இரும்புக் கனிப் பொருள் சேலத்தில் கிடைக்க, அவற்றைப் பயன்படுத்துவதற்குக் கோவையில் தொழிற்சாலை அமைப்பதற்குத் தனி நபர் ஒருவருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதேன்?” என்று தன்னைச் சந்தித்த தூதுக் குழுவினர் கேட்ட போது, அமைச்சர் மேலும் கூறியதாவது :—

“பரீட்சார்த்தமாகவே சிறு தொழிலொன்று நடத்துவதற்குத் தனி நபருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.”

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நடன நாடகம்!

6—4—57 சனி மாலை 6-30 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

☆

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில்

குமாரி ஈ. வி. சரோஜா

பங்கேற்கும் நடன நாடகம் நடைபெறும்

★

நன்கொடை : ரூ. 3, 2, 1.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.